IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

O.S.No. 144 /2014

Deposition of witness for PW1

Name : லலிதா

Caste : -

Husband's Name: சத்தியநாதன்

Calling : -

Village : முத்தரசிகுப்பம் கிராமம்

Religion : இந்து

Taluk : -

Age : 48

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12 day of December , 2018.

Cross Continuation

எனது பிரமாணவாக்குமூலத்தில் பிரதிவாதியின் தந்தையாருக்கும் மற்றும் அவரது சகோதரர்களுக்கும் இடையே வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டதாக நான் கூறியிருக்கிறேன் என்றும் அது குறித்து எனக்கு நேரிடையாக தெரியுமா என்றால் நேரிடையாக தெரியாது வாய்மொழி மூலப்பத்திரத்தின் மூலம் தெரிந்துகொண்டேன். மேற்படி வாய்மொழி மூலப்பத்திரத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி பத்திரத்தை பார்த்தால் யார் யாருக்கு என்னென்ன சொத்து ஒதுக்கப்பட்டுள்ள விவரம் தெரியவருமா என்றால் தெரியும். அதே பத்திரத்தை பார்த்தால் இயேசுவிற்கு என்ன சொத்து ஒதுக்கப்பட்டுள்ள விவரம் தெரியவருமா என்றால் தெரியவரும். நான் வருவாய்த்துறையில் பணிசெய்வதால் தாவா சொத்தை வாங்குவதற்கு முன்னர் மூலப்பத்திரத்தை பார்த்து வாங்கினேனா என்றால் பவர் ஆவணத்தை பார்த்து வாங்கினேன். பவர் பத்திரத்தை தவிர வேறு ஆவணங்களை நான் பார்க்கவில்லையா என்றால் மேற்படி சொன்ன வாய்மொழிபாகப்பிரிவினை பத்திரத்தை பார்த்தேன். வேறு ஆவணங்களை பார்க்கவில்லையா என்றால் இல்லை. சர்வே எண் 144பி-யில் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தோராயமாக 3 ஏக்கருக்கு மேல்இருக்கும். சரியாக என்னால் துல்லியமாக கூற இயலாதா என்றால் இல்லை. சர்வே எண் 144பி என்பது

பட்டா எண்264-ல் வருகிறதா என்றால் இல்லை பட்டா எண்.781-ல் தான் வருகிறது. மேற்படி பட்டா எண். 781-ல் வரும் சொத்தை தான் நான் வாங்கியுள்ளேன் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வா.சா.ஆ 4,5,6 மற்றும் 7 ஆகிய ஆவணமான பட்டா ஆவணத்தில் மேற்படி பட்டா எண் 781 வருகிறதா என்றால் இல்லை. அவ்வாறு எனில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாங்குவதற்கு முன்பு நான் இயேசு பெயரில் உள்ள பட்டா ஏதேனும் பார்த்தேனா என்றால் இல்லை. இயேசு பெயரில் தாவா சொத்து இருந்ததை குறிக்கும் வகையில் நான் எந்த ஒரு ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் வரி ரசீது மட்டுமே தாக்கல் செய்தேன். இயேசு 1995-ல் பொது அதிகாரப்பத்திரம் எழுதி கொடுத்தார். மேற்படி 1995- எழுதப்பட்ட பவர் பத்திரத்தை வைத்து எனக்கு 2009-ல் தான் விஜயன் தாவா சொத்தை விற்றார் என்றால் சரிதான். இயேசுவும், விஜயனும் தவறான ஒரு ஆவணத்தை மோசடியாக தயார் செய்தது என்பதால் தான் 15 வருடகாலமாக தாவா சொத்தை யாரும் வாங்காமல் இருந்தனர் என்றும், நான் அவர்களுக்கு உடந்தையாக இருந்து தாவா சொத்தை பெயரளவிற்கு வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் வா.சா.ஆ3-ன் படி முத்திரை தாள் செலுத்தாமல் இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ8-ன் படி பிரதிவாதிகளின் பெயர்களோடு சேர்த்து என்னுடைய பெயரும் சேர்த்து தாவா சொத்து கூட்டுபட்டாவாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ8, 2018-ல் கணினி மூலமாக பெறப்பட்டுள்ளது. வா.சா.ஆ8-ல் உள்ளபடி நான் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர்கள் பெயருடன் எனது பெயரை சேர்த்துக்கொண்டேனா என்றால் தாவா சொத்தை வாங்கிய பிறகு குறிப்பிட்ட சர்வே எண்ணில் 1 ஏக்கர் நான் வாங்கியதினால் எனது பெயரும் அந்த பட்டாவில் சேர்க்கப்பட்டது. அவ்வாறு எனில் 1 ஏக்கர் போக மீதமுள்ள 2 ஏக்கர் சொச்ச நிலத்திற்கு உரிமையாளர்கள் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர்களா என்றால் ஆமாம். என்னுடைய முதன்மை வாக்குமூலம் மற்றும் வாதுரையில் மேற்படி நான் கூறிய விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனது வழக்குபடி பிரதிவாதிகளுக்கும் அதே புல

எண்ணில் இடம் உள்ளதா என்றால் உள்ளது. நான் கூறியதுபோல் பிரதிவாதிக்கு உரிமையுள்ள இடத்தில் தான் அவர்கள் தற்பொழுது அனுபவித்து வருகிறார்களா என்றால் இல்லை. அவர் மற்ற சமூகத்தினருக்கு அதை விற்று அவர்கள் அனுபவத்தில் இருந்துவருகிறது. நான் கூறுவது தவறு என்றும், பிரதிவாதி தான் அந்த சொத்தினை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை இன்றைய தேதி வரை அனுபவித்து வருகிறேன் என்பதை உறுதி படுத்தும் வகையில் ஏதேனும் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் சிட்டா தாக்கல் செய்துள்ளேன். நான் அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து குறித்து பவர் எழுதி கொடுத்த இயேசுவிற்கு எனக்கு கிரையம் கொடுத்த விஜயனுக்கு எந்த வித உரிமையும் இல்லை அதனால் தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ8-ன்படியே பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர்கள் பெயரிலும் தாவா சொத்தில் பங்கு உள்ளதால் கூட்டு உரிமையாளர்களுக்கு எதிராக நான் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆதியிலிருந்தே பிரதிவாதி பெயருக்கு பட்டா 264-ன்படி கொடுக்கப்பட்டு அவருடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. பிரதிவாதி தான் இன்று வரையில் உரிமையாளர் என்ற முறையில் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றும், நான் தாவா சொத்தை இன்றுவரையில் அனுபவித்தது கிடையாது என்றால் சரியல்ல. நான், அப்பொழுது கிராமநிர்வாக அலுவலராக இருந்த ராமச்சந்திரன் ஆகியோருடன் இணைந்து வருவாய்த்துறை அலுவலகத்தில் வேலை செய்வதை பயன்படுத்தி வா.சா.ஆ8-ல் எனது பெயரை தவறாக இணைத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் வருவாய்த்துறையில் வேலை சேருவதற்கு முன்பே கிரையம் பெற்றுவிட்டேன். என்னை வருவாய்த்துறையில் சேர்த்தே மேற்படி எம்.ஜி.ராமச்சந்திரன் மற்றும் கங்காதரன் ஆகியோர் முன்னால் கிராமநிர்வாக அலுவலர்கள் தான் என்றால் சரியல்ல. நான் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக வேலையில் சேர்ந்தேன். அது குறித்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது

வேலையை பொய்யாக மற்றவர் சொத்தை வருவாய்த்துறையில் உள்ள எனது வேலையை பயன்படுத்தி அபகரிப்பது தான் என்றால் சரியல்ல. பிரதிவாதி எனது சொத்தில் அத்துமீறி நுழைய முற்பட்டது எப்போது என்றால் 2014-ல் நுழைய முற்பட்டார். நான் கூறுவது தவறு என்றும், பிரதிவாதி மேற்படி தாவா சொத்தில் அனுபவத்தில் இருக்கும்பொழுது நான் கூறிய அத்துமீறி நுழைய அவசியம் இல்லை என்றும், நான் பொய்யான வழக்கு மூலத்தை கொண்டு பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அவர்கள் அத்துமீறியது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். அந்த புகாரை நான் நீதிமன்றததில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யுரைக்கிறேன் என்றும், அதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

(Sd/-)..V.Vannamalar
DISTRICT MUNSIF
KATPAD I.